1994 மார்ச் 31]

(ஆ) சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் தடுப்புச் சுவர் பழுதடைந்ததால் படகுகளை நிறுத்த இடர்ப்பாடு ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. து. மூர்த்தி அவர்கள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் தடுப்புச் சுவர் பழுதடைந்ததால் படகுகளை நிறுத்த மீனவர்கள் கஷ்டப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வீசிய புயலால் பழையாறு துறைமுகத்தில் உள்ள தடுப்புச் சுவர் பழுதடைந்தது. இதனைச் சீர் செய்ய ரூ. 25 இலட்சம் செலவாகும் என்று மேற்பார்வைப் பொறியாளர், மீன்பிடித் துறைமுகத் திட்டம் மதிப்பீடு செய்துள்ளார். இத்தொகையை வெள்ள நிவாரண நிதியின்கீழ் ஒதுக்கீடு செய்ய மீன்வள ஆணையர் கேட்டுக்கொண்டார். ஆனால் அரசின் தற்போதைய நிதி நிலை நெருக்கடியால் உடனே சீர் செய்ய இயலவில்லை. இனிவரும் காலங்களில் நிதிநிலைக்கேற்றவாறு படிப்படியாக சீர் செய்யும் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் தடுப்புச் சுவர், அதாவது ''சிட்டிங்'' என்று சொல்லப்படும் தடுப்புச் சுவர் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால், அங்கு மீன்பிடிப் படகுகளை நிறுத்த முடியாத நிலையில் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், கடந்த புயல், மழையாலும் ஏற்பட்ட சேதத்தால், மண். ஓரத்தில் குவிக்கப்பட்டு, படகுகள் நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது மேலும், தடுப்புச் சுவர் கடல் நீராலும், வெள்ளத்தாலும் அரிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. எனவே, மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடிப் படகுகளை நிறுத்தவும் கொஞ்சம் உயரமாக தடுப்புச் சுவர்களைக் கட்டி கொடுப்பதுடன்,

படகுகள் மணல் தட்டி நிற்காமல் இருப்பதற்கு, தடுப்புச் சுவர் பக்கத்தில் உள்ள இடத்தில் சேர்ந்திருக்கிற மணலை தூர் எடுத்து ஆழப்படுத்தியும் தந்தால், மீனவர்கள் கஷ்டம் இல்லாமல் படகு களை நிறுத்துவதற்கு வசதியாக இருக்கும். எனவே, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், இதனைக் கருணையோடு பரிசீலித்து செய்து தர மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் வீசிய பெரும் புயலின் காரணமாக அந்தத் துறைமுகம் மிகுதியாக பாதிக்கப்பட்டது. மீன் வளத் துறை ஆணையர் 25 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் ஒன்றை மதிப்பீடு செய்து அனுப்பி வைத்துள்ளார். ஆனால், நிதி நெருக்கடி காரணமாக உடனடியாக சரி செய்ய இயலாத ஒரு சூழ்நிலை. வருகின்ற நிதியாண்டில் இது போன்ற தமிழகத்தில் துறைமுகங்கள் எல் லாம் அடிப்படை வசதிகளை பெற்றாக வேண்டும் என்ற முனைப் புடன் அங்கு தங்குதள் வசதிகள் மற்றும் கரையோர வசதிகள் அனைத்தும் இருக்க வேண்டும் என்பதற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்பட இருக்கின்றது. இந்தத் திட்டத்தை தயாரித்து மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு, அந்தக் கருத்துரு அனுப்பப் பட்டு, நிதி பெறப்படும் என்பதைத் தெரிவித்து, நிதி வருகின்ற ஒரு சூழ்நிலையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அரசின் தற்போதைய நிதிநிலை நெருக்கடியின் காரணத் தால் உடனடியாகச் சீர்செய்ய இயலவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். படிப்படியாகச் சீர் செய்யும் வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சொன்னார் கள். அங்கே தடுப்புச் சுவர் பலமாக இல்லாததால் மீன்பிடிப் படகுகளை அங்கே நிறுத்த முடியவில்லை. மேலும் அவ்வாறு அங்கே படகுகளை நிறுத்த முடியாததால் அங்கிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதுப்பட்டினம் என்ற ஆற்றில் கொண்டு வந்து நிறுத்துவதால் அவர்கள் தொழில் பாதிக்கப்படுகிறது. எனவே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த பழையாறு மீன்பிடித் துறைமுகத் திற்குக் கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்கவும், மணல் மேட்டை அகற்றி ஆழப்படுத்திக் கொடுக்க வும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய படி இந்த பழையாறு துறைமுகத்திற்கு முன்னுரிமை கொடுத்து பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல், திரு. வி. பி. சந்திரசேகர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப்பணித் துறையின் கட்டிடங்கள்" குறித்த 1989-90 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு அளித்த 4-வது அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை மீதான குழுவின் 14-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1994-95, மொழிதல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

'In pursuance of clause (2) of Article 20, read with clause (3) Article 203, of the Conseitution of India, I, M. Chenna Reddy, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants in advance, during the financial year 1994-95.'

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1994-95—வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-95 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர்.